**சிறப்பு அமர்வு வழக்கு எண்.15/2020** **பெயர்: விஜயகுமாரி**

**தேதி: 27.01.2021**

அ.சா.1 மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணத்தின் பேரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு எழுத படிக்க தெரியாது. அ.த.சா.ஆ. 1 ஆவணத்தில் உள்ள வாசகங்களை போலீஸாரே எழுதிக்கொண்டார்கள். அ.த.சா.ஆ. 1ல் நான் எழுதாத பேப்பரில்தான் கையெழுத்து போட்டேன். என்னிடத்தில் போலீஸார் மூன்று எழுதாத பேப்பரில் கையெழுத்து வாங்கிக்கொண்டார்கள். போலீஸார் என்னிடத்தில் எழுதியுள்ளதை நீதிமன்றத்தில் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். அதைதான் முதல் விசாரணையில் நான் சொல்லியுள்ளேன். என் மகள் பாதிக்கப்பட்ட சிறுமி ஈரோட்டில்தான் இருந்தார். பெரம்பலூருக்கு வரவே இல்லை. போலீஸார் என்னை விசாரிக்கவில்லை.

சிறப்பு அமர்வு வழக்கு எண்.15/2020 பெயர்: குமார்

தேதி: 27.01.2021

அ.சா.2 மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணத்தின் பேரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு எழுத படிக்க தெரியாது. போலீஸார் என்னை விசாரிக்கவில்லை. முதல் விசாரணையில் போலீஸார் சொன்னதை சொல்லியுள்ளேன். நான் வேலை செய்யும் இடத்தில்தான் என் மகள் பாதிக்கப்பட்ட சிறுமி இருந்தார். பெரம்பலூருக்கு பாதிக்கப்பட்ட சிறுமி வரவில்லை.